பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 14 புதன்கிழமை 30.07.2025 அதிர்வு 360

# கோப்பாயில் கோர விபத்து

## பலர் காயம்



தனியார் பஸ்ஸும் ஹயஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் தனியார் 04▶



# செம்மணிப் புதைகுழியில் நேற்றும் 7 என்புத் தொகுதிகள் அடையாளம்

## அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்ட சுவிஸ் தூதுவர்



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது புதிதாக ஏழு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. அதேவேளை, இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிறிவோல்ட் செம்மணிப் புதைகுழியை நேரில் பார்வையிட்டு அகழ்வில் ஈடுபடும் நிபுணர்க 02▶

# எதிரணிகள் ஒன்றிணைந்தால் அடுத்த வருடம் அரசு கவிழுமாம்

## கம்மன்பில கூறுகின்றார்



"அடுத்த வருடம் இதே காலப் பகுதியில் பொருளாதார நெருக்கடி ஏற்படும். எனவே, எதிரணிகள் ஓரணியில் திரண்டால் அடுத்த வருடம் அதே காலப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை பெற்றுக் கொள்ள முடியும். அநுர தலைமையிலான இந்த ஆட்சியை மாற்றுவதற்குரிய தமது கடப்பாட்டை நிறைவேற்ற எதி 04▶



# நல்லூருக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவ வாகனம்

யாழ். நல்லூர் ஆலய வீதித் தடைகளை மீறி ஆலய வளாகத்தினுள் இராணுவத்தினரின் கப் ரக வாகனம் அத்துமீறி நுழைந்தமையால் ஆலய வீதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. 04▶




பல சமயங்களிலும், ஒன்றை இழந்துதான் இன்னொன்றை பெறவேண்டியதாக இருக்கின்றது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட இலங்கை அதிலிருந்து மீளுவதற்கான புதிய உத்திகளை நாட வேண்டி இருந்தது.

தன்னுடைய உல்லாசப் பயண துறையை மேம்படுத்துவதன் மூலம், அந்நிய செலாவணியைக் கணிசமான அளவு ஈட்டி கொள்ள முடியும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொண்ட இலங்கை, அதன் காரணமாக உல்லாசப் பயணிகளுக்கு வெற்றிலை வைத்துப் பெரு வரவேற்பு அளித்தது. உல்லாசப் பயணிகளுக்காக பல விட்டுக் கொடுப்புகளை செய்ய இலங்கை 04▶










## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளுடனும் கலந்துரையாடினார்.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 24ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது ஏழு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. 3 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 111 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இதுவரை 99 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழியை இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிறிவோல்ட் மற்றும் சுவிஸ் தூதரக அரசியல் பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை வருகை தந்து பார்வை யிட்டனர்.

சுமார் 45 நிமிடங்கள் வரை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை அவர்கள் பார்வையிட்டதோடு, அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிபுணர்களுடன் கலந்துரையாடினர்.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனிதா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மற்றும் கலைப்பீட தொல்லியல் துறை மாணவர்களும் நேரு அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி இருந்தனர்.



# வடக்கு ஆளுநர் - சுவிஸ் தூதுவர் யாழ்ப்பாணத்தில் நேற்று சந்திப்பு

## தற்போதைய நிலைமைகள் தொடர்பில் பேச்சு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிறிவோல்ட்டுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிவதே தமது இந்தப் பயணத்தின் நோக்கம் என்று தூதுவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநரால் வடக்கு மாகாணத்திலுள்ள சில கிராமங்கள் இன்னமும் பின்தங்கியுள்ள நிலையிலேயே உள்ளன என்றும், அங்கு வீதிக் கட்டுமானங்கள் கூட இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் வடக்கு மாகாணத்தில் போரின் பின்னர் தொழிற்சாலைகள் போதுமானதாக இல்லாமையால், வேலைவாய்ப்பு சவாலாக உள்ளது என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடி என்பனவற்றுக்கான வளம் சிறப்பாக உள்ளபோதும், மூலப்பொருட்களாகவே இங்கிருந்து ஏனைய இடங்களுக்கு அவை கொண்டு



செல்லப்படுகின்றது என்று தெரிவித்த ஆளுநர், இங்கு பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றக்கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதன் ஊடாக இங்குள்ள உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நிலையான விலை இன்மையால் ஏற்படும் பாதிப்பையும், பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றக் கூடிய தொழிற்சாலைகள் அமைப்பதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார். மேலும், போருக்கு முன்னர் இருந்த ஏற்று நீர்பாசனத்தையும் மீளவும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

பலாலி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்தான விமான சேவைகள் தொடர்பிலும் சுவிஸ் தூதுவர் கேட்டறிந்தார். கொழும்பு – யாழ்ப்பாணம் இடையேயான போக்குவரத்துக்கான நேரத்தைக் குறைக்கும் நோக்குடன், கட்டுநாயக்காக – பலாலி இடையேயான இணைப்பு விமானச் சேவைக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

பொருளாதார மேம்பாட்டுக்காக முதலீடுகளின் அவசியத்தைச் சுவிஸ் தூதுவர் வலியுறுத்தினார். இலங்கை முதலீட்டுச் சபையால் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அதன் உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். அத்துடன், கடந்த காலங்களில் இங்கு நிலவிய இலஞ்சம் மற்றும் ஊழல் காரணமாகப் பெருமளவு முதலீட்டாளர்கள் திரும்பிச் சென்றதைக் குறிப்பிட்ட ஆளுநர் தற்போதைய சூழலில் பெருமளவு முதலீட்டாளர்கள் முதலிடுவதற்காக முன்வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்துள்ளது.

மாதத்துக்கு ஒன்றரை முதல் இரண்டு லட்சம் உல்லாச பயணிகள் என்ற இலக்கை நோக்கி நாடு சுறுசுறுப்பாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

இதேபோன்று உல்லாசப் பயணத் துறையை பெரும் வருமானம் ஈட்டும் தொழிலாக விருத்தி செய்துள்ள தாய்லாந்து போன்ற நாடுகள் அந்தத் துறைக் கேற்ப தமது பண்பாட்டு விழுமியங்களையும் மாற்றிக் கொண்டுள்ளன. அங்கு உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்துவதற்காக - கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்காக - பாலியல் தொழிலை ஓர் எல்லை வரை அனுமதிக்கின்ற போக்குக் காணப்படுகின்றது.

இலங்கையும் தன்னுடைய உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்துவதற்கும் பல வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கும் தனது விழுமியங்கள் சிலவற்றில் விட்டுக்கொடுக்கவும் தயாராக இருப்பதாக கூறப்படுகின்றது.

அதில் ஒன்று சூதாட்ட விடுதிகளையும் நிகழ்வுகளையும் தாராளமாக இடம்பெற அனுமதிப்பது. இலங்கையின் பண்பாடு, மக்களின் விழுமியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்குகின்ற போது சூதாட்டம் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல. ஆனால் உல்லாச பயண துறையை வரவேற்பதற்கு அதிலே விட்டுக் கொடுப்பு செய்ய வேண்டிய நிலைமை நாட்டுத் தலைமைக்கு உண்டு.

தெற்காசியாவின் முதல் ஒருங்கிணைந்த ரிசோர்ட் என்று கூறப்படும் - இலங்கையில் தொடங்கப்படும் - கனவுகளின் நகரம், பல பிராந்தியங்களில் 400க்கும் மேற்பட்ட சூதாட்டக்காரர்களை ஈர்க்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் மக்காவ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சூதாட்டக்காரர்கள் இதில் அடங்குவர். அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுவா ஹோட்டல் மற்றும் உலகளாவிய சூதாட்ட நிறுவனமான மெல்கோ ரிசோர்ட்ஸ் அண்ட் என்டர்டெயின்மென்ட் ஆகியவற்றின் கூட்டுத் திட்டமான இந்த முயற்சி ஓகஸ்ட் 02 ஆம் திகதி இங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளது.

நிறுவனத்தின் உள் வட்டாரங்களின்படி, 'பிற சேவைகள்' பிரிவின் கீழ் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் ஹொங்கொங் போன்ற பல நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இருந்து சுமார் 150 பெண்களும் தொடங்கப்படுவதற்கு முன்னதாக இலங்கைக்கு அழைத்து வரப்பட உள்ளனர்.

இந்த மெகா நிகழ்வில் முதலில் பொலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான் கலந்து கொள்வதாக திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 'அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட எதிர்பாராத தனிப்பட்ட காரணங்கள்' என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்த ஒரு நடவடிக்கையின் கீழ் , அவர் தமது இலங்கைப் பயணத்தை ரத்துச் செய்தார்.

பின்னர், பொலிவுட் சூப்பர் ஸ்டார் ஹிருத்திக் ரோஷன் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

ஒரு பக்தியுள்ள முஸ்லிமான ஷாருக்கான், சூதாட்டம் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதால், நிகழ்விலிருந்து விலகினார் என ஊகங்கள் பரவி வருகின்றன.

எது, எப்படியாயினும், அந்நிய செலாவணிக்காக உல்லாசப் பயணத் துறையை ஊக்குவிக்கும் இலங்கை, அந்தத் துறையின் அசுர வளர்ச்சி நாட்டின் பண்பாட்டுக் கோலங்களை - மதிப்புக்குரிய உயர்ந்த விழுமியங்களை - வீழ்த்தி விடாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கணணை விற்று சித்திரம் வாங்குவதில் அர்த்தமில்லை அல்லவா...!

## எதிரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணிகள் முன்வரவேண்டும்."

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"2028 இல் இந்நாடு கடன் செலுத்தும் நாடாக மாறவேண்டுமெனில் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் 5 ஆக இருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. 2024 இல் நாம் இதனை செய்தோம். எனினும், தற்போது பொருளாதார வளச்சி வீதமானது 3.5 ஆகவும், அடுத்த வருடம் 3.1. ஆகவும் இருக்குமென சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை அடைய முடியாமல் பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும்.

இந்நிலையில் எதிரணிகள் ஒன்றுபட்டால் அடுத்த வருடம் அதே காலப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிரணிகள் ஓரணியில் திரண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

அடுத்த ஜனாதிபதி யார் என்ற விடயத்தை ஒரு புறம் வைத்துவிட்டு, நாடாளுமன்றத் தேர்தலை வென்றெடுக்க ஒன்றுபட வேண்டும்.

ஜனாதிபதி யாரென்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் பொறுப்பை எதிரணிகள் ஏற்க வேண்டும். எதிரணியை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் நான் இறங்கியுள்ளேன்." – என்றார்.

## நல்லூருக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஆலய மகோற்சவ திருவிழாக்களை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி வரையில் நல்லூர் ஆலயச் சுற்று வீதிகள் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டு மாற்று வீதிகள் ஊடாகவே வாகனங்கள் செல்லப் பணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொடியேற்றத் திருவிழா நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஆலயச் சுற்று வீதிகளில் உள்ள வீதித் தடைகளைத் தாண்டி இராணுவத்தினர் கப் ரக வாகனத்தில் ஆலய முன் வீதி வரையில் பிரவேசித்தனர்.

வீதித் தடைகளில் பொலிஸார், யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்கள், தனியார் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கடமையில் இருக்கும் போது, அவர்களின் அறிவுறுத்தல்களையும் மீறி இராணுவத்தினர் அடாத்தாக ஆலய வீதிக்குள் உட்பிரவேசித்தமை ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்களுக்கிடையில் கடும் விசனத்தை ஏற்படுத்தியது.

# வடக்கு ஆளுநர்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்து செல்கின்றது என்றும், அதனுடன் தொடர்புடைய முதலீட்டுக்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக இணைப்பு வீதிகள், இறங்குதுறைகள் புனரமைப்பு என்பன முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார்.

தற்போது திருவிழாக் காலம் என்பதால் வடக்கு மாகாணத்தை நோக்கி அதிகளவு சுற்றுலாவிகள் வருகின்றனர் என்று தெரிவித்த ஆளுநர், விடுமுறை நாள்களில் உள்ளூர் சுற்றுலாவிகளும் வடக்கை நோக்கி அதிகம் வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசு வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளமையைத் தெரியப்படுத்திய ஆளுநர், உலக வங்கியைக் கூட இந்த மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்த ஜனாதிபதி பணித்துள்ளமையையும் குறிப்பிட்டார். ஆனாலும், கொழும்பு மைய சில திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொள்வதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கடந்த காலங்களைவிட வடக்கு மாகாணத்துக்கு மூன்று மடங்கு நிதி அரசால் ஒதுக்கப்பட்டுள்ளமையையும் ஆளுநர் தெரியப்படுத்தினார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், செம்மணிப் புதைகுழி விவகாரம், தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம், மீள்குடியமர்வு செயற்பாடு, சிவில் நிர்வாகத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் தூதுக் குழுவினர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும், மாகாண சபைத் தேர்தல், மாகாண சபை முறைமை தொடர்பாகவும் ஆளுநரிடம், தூதுக் குழுவினரால் கேள்வி எழுப்பப்பட்டது. கடந்த காலங் களில் மாகாண சபை முறைமையைப் பலவீனப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் சாரதியும், 15 இற்கு மேற்பட்ட பயணிகளும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் கோப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளுடன் வந்த தனியார் பஸ்ஸும் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று ஹயஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தைத் தவிர்க்கத் தனியார் பஸ் சாரதி முயற்சி மேற்கொண்ட போதிலும் விபத்து இடம்பெற்றுள்ளது. தனியார் பஸ் அருகில் உள்ள சங்கக் கடை வாசலுடன் சென்று நின்றது.

காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.







# இலங்கை - ஜோர்தான் நாடாளுமன்ற சங்கத்தை மீண்டும் ஸ்தாபிக்க சபாநாயகர் உறுதியளித்தார்

நாடாளுமன்ற நட்புறவு சங்கங்களை மீளஸ்தாபிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், விரைவில் இலங்கை – ஜோர்தான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று உறுதியளிப்பதாக ஜோர்தான் தூதுவரிடம் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

ஜோர்தான் இராச்சியத்தின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள யூசுஃப் முஸ்தபா அப்துல் கனி மரியாதையின் நிமித்தம் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்னவை கடந்த 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சந்தித்த போதே இதனை தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இலங்கைக்கும் ஜோர்தானுக்கும் இடையில் சுமார் 60 ஆண்டு காலத்திற்கும் மேலாக நீடிக்கும் இராஜதந்திர உறவுகள் பற்றி கௌரவ சபாநாயகர் இச்சந்திப்பில் நினைவுபடுத்தினார். எதிர்காலத்தில் அனைத்து துறைகளிலும் ஜோர்தானுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இலங்கையின் ஆர்வம் குறித்து அவர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கின் தற்போதைய நிலைமை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், பிராந்தியத்தில் நல்லிணக்கம் மற்றும் அமைதியின் முக்கியத்துவத்தை சபாநாயகர் வலியுறுத்தியதுடன், அமைதியை விரும்பும் நாடாக இலங்கையின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார். மேலும், சுற்றுலாத் துறையில் மேம்பட்ட ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளை சபாநாயகர் வலியுறுத்தினார்.

சர்வதேச அரங்கில் ஜோர்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால பரஸ்பர ஒத்துழைப்புக் காணப்படுவதைச் சுட்டிக்காட்டிய தூதுவர் யூசுஃப் முஸ்தபா அப்துல்கனி, இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்ற ஜோர்தானின் உறுதியான நிலைப்பாட்டையும் தெரிவித்தார்.

ஜோர்தானில் தற்பொழுது சுமார் 15,000 இலங்கையர்கள் பணியாற்றி வருவதாகவும், இவர்கள் முதன்மையான ஆடைத்தயாரிப்புத் துறையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் எதிர்வரும் வருடங்களில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் ஆழமடையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை ஜோர்தான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தூதுவர், இது இரு நாடுகளுக்கும் இடையே வலுவான உறவுகளை வளர்ப்பதற்கும் சிறந்த நாடாளுமன்ற ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் உதவும் என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன, நாடாளுமன்ற நட்புறவு சங்கங்களை மீளஸ்தாபிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், விரைவில் இலங்கை – ஜோர்தான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் உறுதியளித்தார்.





# பருத்தித்துறை நகர் பகுதியில் வடி கான்கள் தூர்வாரும் பணி

பருத்தித்துறை நகர் பகுதியில் காணப்படும் வடி கான்களை தூர்வாரும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை நகரில் காணப்படும் வடி கான்கள் நீண்ட காலமாக தூர் வாரப்படாது இருந்து வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் புதிய பருத்தித்துறை நகரபிதா டக்ளஸ் போலினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கோரிக்கை கடிதம் வழங்கப்பட்டு அவர்களது ஒத்துழைப்புடன் நகர சபை பணியாளர்கள் மூலமாக தூர் வாரும் பணி கடந்த நாள்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு! ஒருவர் வைத்தியசாலையில்!!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் வீதி, கட்டுடை பகுதியில் இடம்பெற்றுள்ளது

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

பாதிக்கப்பட்ட நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை பின்னால் ஓட்டோவில் வந்த மூவர் அவரைக் கீழே தள்ளி வீழ்த்தி விட்டு வாள்வெட்டை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

வீதியில் சென்றவர்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

ஊரெழு பகுதியைச் சேர்ந்த நபரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


ஆதவன் சரவணபவனின்
“குல்லமடை”, “ஒற்றை மைனா”
இரண்டு சிறுகதை நூல்களின் உரையாடலும்
ஒரு தேநீர் விருந்தும்




02.08.2025 சனிக்கிழமை
பி.ப. 3.30 மணிக்கு
எங்கட புத்தகங்கள் இல்லம்
இல: 18/2, திருவடி நிழல், அம்மன் வீதி, யாழ்ப்பாணம்

திரு. ஐ. சாந்தனின்
ஒருங்கிணைப்பில்

குல்லமடை பற்றி
திரு. சி. ரமேஸ்

ஒற்றை மைனா பற்றி
திரு. சு. குணேஸ்வரன்

ஆகியோரின் உரைகள்

தொடர்ந்து உரையாடலும், தேநீர் விருந்தும்

நிறைவுரை: ஆதவன் சரவணபவன்

அன்புடன் அழைக்கிறோம் | மகிழ் வெளியீட்டகம்

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதார நெருக்கடி வருமா?

அடுத்த வருடம் இக்காலப்பகுதியில் இலங்கையில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடும். அதனை நோக்கியே இந்நாட்டை அரசாங்கம் அழைத்துச்செல்வதாக பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்திருக்கின்றார்.

அவர் மட்டும் என்றல்ல, பல பொருளாதார நிபுணர்களும் இத்தகைய எச்சரிக்கையை விடுத்தே வருகிறார்கள்.

2022 ஆம் ஆண்டில் மீண்டெழவே முடியாத மிக மோசமான பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்டது. அதிகாரத்திலிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார நெருக்கடியால் எழுந்த மக்கள் கிளர்ச்சிக்கு முகம் கொடுக்க முடியாமல் நாட்டை விட்டே ஓடித் தப்பினார்.

அவரது இடத்துக்கு ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க பொருளாதார ரீதியில் தற்காலிக மீட்சிக்கு சில அவசர நடவடிக்கைகளை எடுத்தார். அவற்றை அப்போது மோசமாக விமர்சித்த தேசிய மக்கள் சக்தி, இப்போது தான் அதிகாரத்துக்கு - ஆட்சிக்கு - வந்த பின்னர் ரணில் விக்கிரமசிங்க வகுத்த அந்தப் பொருளாதாரக் கொள்கைப்படி, அட்சரம் பிசகாமல் அதன் வழியே தான் நாட்டைக் கொண்டு நடத்துகின்றது.

ஆனாலும் மீண்டும் பொருளாதார நெருக்கடி மோசமாக வரலாம் என்ற எச்சரிக்கை பல தரப்புகளிலும் இருந்து வந்த வண்ணமே இருக்கின்றது.

2022 இல் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டமையை அடுத்துத் தான் செலுத்த வேண்டிய சர்வதேச கடன் கடப்பாடுகளை நிறைவேற்றாமல், கடனிறுக்க வழியற்ற - வங்குறோத்தான - நாடாக இலங்கை விழிபிதுங்கி நின்றது.

ஆயினும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடி, அதனிடம் சரணாகதி அடைந்து, அதன் வழிப்படி பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தமையினால் 2028 வரை கடன் மீளளிப்புச் செய்யாமல் இருப்பதற்கான சகாயத்தை உலக நாடுகளும் தரப்புக்களும் இலங்கைக்கு வழங்கி உள்ளன. ஆனால் 2028 இலிருந்து அந்தக் கடனை - உரிய தவணை கொடுப்பனவுகளை - சாக்குப் போக்குக் கூறித் தவிர்க்காமல் - செலுத்த வேண்டும். அங்குதான் இலங்கைக்கு பெரும் நெருக்கடி காத்து நிற்கின்றது.

2028 இல் இலங்கை கடன் மீளளிப்புச் செய்யும் நாடாக மாறவேண்டுமெனில் வருடாந்தப் பொருளாதார வளர்ச்சி வீதம் 5 ஆக இருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. 2024 இல் நாம் இதனை செய்தோம். எனினும், தற்போது பொருளாதார வளச்சி வீதமானது 3.5 ஆகவும், அடுத்த வருடம் 3.1. ஆகவும் இருக்குமென சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது.

அந்த நிலைமையில்தான் நாட்டின் பொருளாதாரம் இருக்குமாயின், சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை அடைய முடியாமல், பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும் என்றே எச்சரிக்கப்படுகின்றது.

அப்படி நேர்ந்தால், அதிலிருந்து நாடு மீண்டெழ மீண்டும் வாய்ப்புக் கிட்டுமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

# சுற்றுலாப் பயணிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தற்போது தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற முடியும் என பொலிஸ் அறிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனை தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ. வூட்லர், சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தை கொண்டுள்ள சுற்றுலாப் பயணிகள், தங்கள் நாட்டின் சாரதி அனுமதிப்பத்திரத்துடன், இலங்கையில் வாகனம் செலுத்த அனுமதிக்கப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் நாட்டின் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் மட்டுமே இலங்கைக்கு வருபவர்கள் இலங்கையில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற அனுமதிக்கப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வேரஹெரவில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்தில் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற முடியும்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக அந்த அலுவலகத்தில் விசேட கருமபீடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு அவர்கள் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறலாம்.

இதற்காக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்களது நாட்டின் சாரதி அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

இருப்பினும், தேவையான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் இலங்கையில் வாகனங்களை செலுத்துவதை தவிர்க்குமாறு சுற்றுலாப் பயணிகளை பொலிஸ் பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

இதனிடையே, இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வந்தவுடன் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு ஏற்றவகையில், நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் வசதிகளை அறிமுகப்படுத்தும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

# பீடி அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதில் வீழ்ச்சி



வரி அதிகரிப்பு காரணமாக பீடி உற்பத்தியாளர்கள், தங்களது தொழில் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் செயற்பாடு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் முன்னிலையில், அழைக்கப்பட்டபோது மதுவரி திணைக்கள அதிகாரிகள் இந்த விடயத்தை தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், பீடி மீதான புகையிலை வரியை 2 ரூபாவிலிருந்து 3 ரூபாவாக உயர்த்தும் வகையில் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கும் அரசாங்க நிதி பற்றிய குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தநிலையில், வரி உயர்வு காரணமாக கடந்த ஆண்டில் 1,140 அனுமதிப் பத்திரங்களில் 840 மட்டுமே புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், மதுவரி திணைக்களத்தின் வருமானமும் இதனால் குறைவடைந்துள்ளது.

கடந்த ஆண்டு 2 பில்லியன் ரூபாய் வருமான இலக்கில் 1,055 மில்லியன் ரூபா மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த ஆண்டில் இதுவரை 469 மில்லியன் ரூபா மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

பீடி கடத்தல் மற்றும் குறைந்த அளவிலான கண்காணிப்பு நடவடிக்கைகளே இவற்றுக்கு காரணம் என மதுவரி திணைக்களத்தினர் குறிப்பிட்டனர்.

அதிக வரி, சட்டப்பூர்வ வணிகங்களை குறைத்து சட்டவிரோத சந்தையை ஊக்குவிக்கக்கூடும் என குழுவின் உறுப்பினர்கள் எச்சரித்ததுடன் வரி குறைப்புகள், வருவாய் அதிகரிக்க வழிவகுக்கலாம் என குறிப்பிட்டனர்.

அதற்கமைய, விஞ்ஞான ரீதியில் வரி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அரசாங்க நிதி பற்றிய குழு வலியுறுத்தியுள்ளது.



# கடற்கரையில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு அபராதம்

நாட்டின் கடற்கரையோரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப் படாத கட்டுமானங்களுக்கு ஆண்டுதோறும் அபராதம் விதிக்க சட்டவிதிகள் கொண்டுவரப்படும் என கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்காக, ஆண்டுதோறும் அனுமதிப்பத்திரமொன்றையும் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அதன் பணிப்பாளர் நாயகம் டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

கடற்கரையைச் சுற்றியுள்ள பாதுகாக்கப்பட்ட வலயத்தில் அங்கீகரிக் கப்படாத கட்டுமானங்களை தகர்ப்பதன் மூலம், கடலோர பகுதிக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.



# இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இந்த மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் இந்தியாவிலிருந்து 32,925 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதேநேரம், இந்த மாதத்தின் முதல் 27 நாள்களில் மாத்திரம் மொத்தமாக, 173,909 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,341,953 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. இந்தியாவைத் தவிர, பிரித்தானியா, நெதர்லாந்து, சீனா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளிலிருந்து அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்திஅதிகாரசபைதெரிவித்துள்ளது.



# திரௌபதி முர்முவிடம் நற்சான்று பத்திரம் வழங்கினார் இலங்கை உயர்ஸ்தானிகர்

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ் தானிகர் மகிஷினி கொலோன்னே தமது நற்சான்று பத்திரத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர் முவிடம் வழங்கினார்.

இதன்படி, ராஷ்டிரபதி பவனில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் இந்தியக் குடியரசுத் தலைவர், இலங்கையின் உயர் ஸ்தானிகரிடமிருந்து நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொண்டார்.

இலங்கையின் அரசமைப்பு பேர வையால் நியமனம் அங்கீகரிக் கப்பட் டதன் பின்னர், மகிஷினி கொலோன்னே இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக நிய மிக்கப்பட்டார்.

முன்னதாக, 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கான துணை உயர் ஸ்தானிகராக மகிஷினி கொலோன்னே பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# வெப்பமான வானிலை நாளை முதல் நிலவும்

நாட்டின் சில பகுதிகளில் நாளை முதல் வெப்பமான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கும், வவுனியா மாவட்டத்திற்கும் இந்த எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

# இல்லாத ஊருக்கு செல்லாத வழிகாட்டும் பொல்லாத பொன்னம்பலம்



கறுப்பு ஜூலை வாரத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் கூட்டமொன்று நடந்திருக்கிறது. அதில் உரையாற்றிய காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம் ஒரு முக்கியமான விடயத்தை எடுத்துக்கொண்டு இல்லாத ஊருக்கு செல்லாத வழிகாட்டும் வித்தையைக் காட்டியிருக்கிறார். தமிழ் மக்கள் தொடர்பான விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுபோவது தொடர்பிலேயே அந்த வித்தை அமைந்திருந்தது.

அவ்வாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (International Criminal Court) நாடுவதற்கு 3 வழிகள் உண்டென அவர் கூறுகிறார். ஆனால் அதிலுங்கூட ஒரு தவறு இருக்கிறது. உண்மையில் இரண்டு வழிகள்தான் உள்ளன. அந்த 2 வழிகளுமே சாத்தியமற்ற வழிகள் என்று நன்றாகத் தெரிந்துகொண்டே ஏமாற்றுத்தனமாகப் பேசியிருப்பதுதான் இங்கே அலசப்படுகின்ற விடயம். இவரது குதர்க்கமான பேச்சைக் கேட்டுக்கொண்டு மேடையில் சில 'அரசியல்வாதிகள்' இருந்திருக்கிறார்கள். போதாக் குறைக்கு இது தொடர்பில் தான் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை ஏற்குமாறு தமிழரசுக் கட்சிக்கு வேண்டுகோள் வேறு விடுக்கிறார்.

அவரது கூற்றுப்படியே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதற்கான சாத்தியம் அறவே இல்லை. அவரது பேச்சே இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

1.இலங்கையை இந்த நீதிமன்றம் விசாரிப்பதற்கான அதிகாரம் இயல்பாகவே இல்லை. காரணம் இந்த நீதிமன்றத்தை இலங்கை அங்கீகரிக்க மறுத்து அத்தகை அங்கீகாரத்தை ஏற்க வழிசெய்த ரோம் சட்டத்தில் (Rome Statute) கையெழுத்திடாதபடியால். ஆகவே இலங்கையை அங்கே நிறுத்த முடியாது என்பது தெட்டத்தெளிவான விடயம்.

2.இரண்டாவது வழி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி - இப்படியாகக் குற்றங்கள் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ளன எனக் கூறி அதை விசாரிக்கும்படி தீர்மானம் நிறைவேற்றி - அதற்கான அதிகாரத்தை இந்த நீதிமன்றத்திற்கு வழங்கி பாரப்படுத்த வேண்டும். பாதுகாப்புச் சபை நிறைவேற்ற முயலும் எந்தத் தீர்மானத்தையும் இரத்துச் செய்யும் 'வீட்டோ' எனும் அதிகாரம் அதன் நிரந்தர அங்கத்துவம் பெற்றுள்ள ஐந்து நாடுகளுக்கு இருக்கிறது. அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவையே அந்த வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகள். இவற்றுள் எந்த ஒரு நாடாவது ஒரு தீர்மானத்திற்கு மறுப்புத் தெரிவித்து தனது வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்தால் அந்தத் தீர்மானம் நிறைவேறாது. அப்படிப் பார்க்கும் போது, இலங்கைக்கு எதிரான எந்தத் தீர்மானத்தையும் ரஷ்யாவோ, சீனாவோ ஆதரிக்கும் வாய்ப்பு அறவே இல்லை. நூறு வீதம் அவர்கள் எதிர்ப்பார்கள் என்பது யாவரும் அறிந்ததே. இதனை நாம் மனித உரிமைகள் சபையில் எதார்த்தமாகவே பல தடவைகள் கண்டிருக்கிறோம்.

3 ஆவது வழியாக அவர் கூறியது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் செல்வதற்கான வழியல்ல. அது தவறு. அது சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) செல்வதற்கான வழி மட்டுமே. அது யாதெனில் :

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்நாட்டுக் கொடுமைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி நாடொன்றிற்குச் செல்லும்போது, அதன் காரணமாக அந்த நாட்டுக்கு நெருக்கடிகள் உள்ளதாக அந்த நாடு இலங்கையை சர்வதேச (ICJ) நீதிமன்றத்தில் நிறுத்தலாம். அதே சமயம் அந்த நாடு மேற்குறித்த ரோம் சட்டத்தை ஏற்றுக்கொண்ட நாடாக இருக்க வேண்டிய அவசியம் கூட இல்லை.

இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குச் செல்லும் வாயப்பும் அறவே இல்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

இதனைக் கருத்திற்கொண்டுதான் ரோம் சட்டத்தில் கையிடுங்கள் என சென்ற ஆண்டு மே மாதத்தில் திரு. சுமந்திரன் நாடாளுமன்றத்தில் வற்புறுத்திப் பேசினார். அப்போது, 'தமிழ் மக்களுகெதிரான குற்றங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவேண்டும். அதற்கான வழியைத் திறந்துவிடுங்கள். எனவேதான் ரோம் சட்டத்தில் கையொப்பமிட்டு அதனைச் செய்யுங்கள்!' - என்று அவர் வலியுறுத்தினார்.

இதே கோரிக்கையைத்தான் இப்போத் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கும் மேலான இடைவெளியின் பின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சென்ற வாரம் இலங்கையிடம் முன்வைத்துள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, இந்த வழிகள் மட்டுமே இந்த நீதிமன்றுககுச் செல்வதற்காக உள்ள வழிகள் என்று தானே சொல்லிக்கொண்டு, அதே வாயால், நாம் அங்குதான் சென்று நீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பொன்னம்பலம் வாய்கிழியக் கத்தவது யாரைத் திருப்திப்படுத்த அல்லது யாரை ஏமாற்ற என்பதே கேள்வியாக இருக்கிறது.

இந்த விடயத்தைத் தமிழ் மக்கள் ஆராய்ந்து பார்த்துக்கொள்ள மாட்டார்கள் என்று இவர் தீர்மானித்துவிட்டாரா? அல்லது இதேபோன்ற ஏமாற்று வித்தைகளை அரங்கேற்றிக்கொண்டு வெளிநாடுகளில் குஷி வாழ்க்கை வாழும் சிலரைத் திருப்திப்படுத்தி 'கறக்க' முயலும் தந்திரமா என்பதே மக்களின் கேள்வியாக இருக்கிறது.

இதிலே சோகம் என்னவெனில் இவர் பேசிய பின்பு மேடையிலிருந்தவர்களுள் ஒருவராவது இந்த உண்மைகளை வெளிப்படுத்தத் தென்பில்லாதவர்களாக இருந்தமைதான். ஒருவேளை அவர்களுக்குக்கூட இவரது கூற்றை ஆராய்ந்து பார்க்கும் திறன் இல்லையோ என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது.



சி. இரத்தினவடிவேல்
(தலைவர், தமிழரசுக் கட்சி கொழும்புக்கிளை)

இலங்கைத் தமிழரசுக் கட்சி எப்போதுமே சர்வதேச விசாரணையை வலியுறுத்தியே செயற்படுகிறது. அதனைச் சாத்தியமாக்கும் வழிவகைகளை கட்சி தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இது விடயத்தில் கட்சிக்கு திரு. பொன்னம்பலமோ அவரது குழுவினரோ பாடம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர் செய்யப்போகிறோம் என்று சொல்கிற விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு முன்செல்ல வேண்டும்.

# சாவகச்சேரி நகரப் பகுதியில் நடந்த விபத்தில் ஒருவர் காயம்


சாவகச்சேரி நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள் கார் மற்றும் பஸ் ஆகியவை விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று (29) மாலை 6.45 மணிக்கு சாவகச்சேரி இலங்கை வங்கி முன்பாக இடம்பெற்றுள்ளது.

இலங்கை வங்கியிலிருந்து புறப்பட்டு மோட்டார் சைக்கிள் பிரதான வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி சென்ற காரை முந்த முற்பட்ட வேளையில், சாவகச்சேரி நகரை நோக்கி சென்ற பஸ்ஸுடன் மோதி தூக்கி வீசப்பட்டுக் காருடன் மோதி பஸ் சில்லுக்குள் கால்கள் அகப்பட்டுப் படுகாயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.






# இனியபாரதியின் மற்றொரு சகா சபாபதி மட்டு. கிரானில் வைத்து நேற்றுக் கைது!

## இதுவரையில் சகாக்கள் நான்கு பேர் கைது

**(கனகராசா சரவணன்)**

இனியபாரதியின் இன்னுமொரு சகாவான – வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த – பாலிகிருஷ்ணன் சபாபதி என்பவரை மட்டக்களப்பு கிரானில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் கொழும்பில் இருந்து சென்ற குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ரி.எம்.வி.பி. கட்சியைச் சேர்ந்த இனிய பாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பாளருமான கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை கடந்த ஜூன் 28ஆம் திகதி திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் திருக்கோவில் மற்றும் மட்டு சந்திவெளி பகுதிகளில் வைத்து குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

இனியபாரதியிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் வெலிகந்தை தீவுச்சேனை வதைமுகாமில் இருந்து செயற்பட்டுவந்தவரும், இனியபாரதியின் சகாவுமான அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பா.சபாபதியை கிரான் வைரவர் கோவில் வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று மாலை 4.00 மணியளவில் குற்ற விசாரணைப் பிரிவினர் சுற்றிவளைத்துக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை இனியபாரதியைக் கைது செய்து விசாரணை செய்ததன் பின்னர் இனியபாரதியின் முன்னாள் சாரதி செந்தூரன், அவரது சாகாவான சந்திவெளியைச் சேர்ந்த சசீந்திரன் தவசீலன் மற்றும் சகாவான திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்கினேஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் இனிய பாரதி மற்றும் பிள்ளையானுடன் தொடர்புபட்டவர்கள் பயப் பீதியில் இருந்துவருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

# 30 கழிவு சேகரிக்கும் கம்பிக் கூடுகளை யாழ்.மாநகர சபைக்கு வழங்கியது 'கீல்ஸ்'




**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதியில்சுத்தம்பேணும்நோக்கில்மேற்கொள்ளும் திட்டத்துக்காக 30 கழிவு சேகரிக்கும் கம்பிக் கூடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகரத்தின் நகர்ப்புறத்தில் தினமும் சேரும் அதிக குப்பைகளைத் தரம் பிரித்து இலகுவில் சேகரிக்கும் நோக்கில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கள்ளப்பட்டன.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான 30 கூடுகளைக் 'கீல்ஸ்' நிறுவனத்தினர் மாநகர முதல்வர் வி.மதிவதனி மற்றும் ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் ஆகியோரிடம் மாநகர சபையில் வைத்து கையளித்தனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட கூடுகள் முதல் கட்டமாக நல்லூர் கந்தன ஆலய வருடாந்த மகோற்சவ காலத்தில் ஆலய சூழலில் சுகாதார நலன் கருதி வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து எதிர்காலத்தில் நகர்ப்புறங்களில் அதிகமாக பிளாஸ்ரிக் கழிவுகள் சேரிம் இடங்களில் வைக்கப்படவுள்ளன.







# திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆடிப்பூர விஷேட அபிஷேக நிகழ்வு

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆடிப்பூரம் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை சிவஸ்ரீ கைலாசி சங்கர் இராமச்சந்திர குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. சிறப்பு அபிஷேகம் நடைபெற்று, அதைத்தொடர்ந்து ஸ்ரீபத்திரகாளி அம்பாள் அலங்கரிக்கப்பட்டு அலங்கார தீபாராதனை நடைபெறுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு :- எஸ்.எம்.எஸ்)







# இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி 38 ஆண்டுகள்!

## 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடமுறைப்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவும் இதுவே தருணம்



- ராஜ் சிவநாதன் -

2025 ஜுலை 29 ஆம் திகதி, இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தமான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 38 ஆவது ஆண்டு நினைவு நாளாகும். 1987 இல் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்தன இடையே கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம், இலங்கையின் இன முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வந்து, நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் இதயமாக, அரசமைப்பைத் திருத்தி அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தும் வகையில் 13 ஆவது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக, தமிழர் பெரும்பான்மை உள்ள வட மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு சுய நிர்வாகம் வழங்கும் ஒரு அரசியல் வடிவமைப்பாக இது இருந்தது.

ஆனால், நான்கு தசாப்தங்கள் நெருங்கிய பிறகும், இந்த ஒப்பந்தத்தின் அடிப்படை வாக்குறுதிகள் இன்னும் நிறைவேறவில்லை. சட்டப்பூர்வ கட்டமைப்பு இருந்தாலும், தொடர்ந்து வந்த அரசுகள் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை தவிர்த்துவிட்டன. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறாதமை, அரசமைப்புப்படி அரசின் கடமையை மீறுவது மட்டுமல்லாமல், ஜனநாயகமும் நல்லிணக்கமும் மீதான அரசின் தன்மையின்மையையும் காட்டுகிறது.

### அரசியலமைப்புப் பொறுப்பும் ஒழுங்கியல் கடப்பாடும்

மாகாண சபைகள் ஒரு விருப்பத்தேர்வாக இல்லாமல், அரசமைப்பில் உறுதியாக இடம்பெற்றுள்ளன. தேர்தல்களை தொடர்ச்சியாக ஒத்திவைப்பது அரசமைப்புப் பொறுப்புக்கு எதிரானது, மேலும் சட்டத்தின் ஆட்சி மீதான நம்பிக்கையை பாதிக்கிறது. இது மக்கள் நம்பிக்கையையும் சமூக ஒருமைப்பாட்டிற்கான முயற்சிகளையும் சீர்குலைக்கும்.

தற்போதைய அரசாங்கம் முன்னர் வந்த பல அரசாங்கங்களைப் போலவே தேர்தல்களை நடத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளது. ஆனால் அதற்கான திட்டமோ காலக்கெடுவோ இன்று வரை அறிவிக்கப்படவில்லை. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் நிர்வாக ரீதியாக குறுக்கீட்டிலேயே இருக்கின்றன.

### பொருளாதாரப் பாதிப்பு

சட்ட மற்றும் அரசியல் அம்சங்களைத் தாண்டி, இந்தத் தாமதம் கடுமையான பொருளாதார பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறது. மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் பொறுப்புள்ள மாகாண நிர்வாகமின்றி, மறுசீரமைப்புக்கான திட்டங்களை வடிவமைப்பதும் செயல்படுத்துவதும் சிக்கலாகிறது. போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் இன்னும் வேலைவாய்ப்பு குறைவு மற்றும் முதலீட்டுக் குறைபாடுகளால் அவதிப்படும் இந்தப் பகுதிகளில் இது மிகவும் பரிதாபமான நிலையை ஏற்படுத்துகிறது.

மீண்டும் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மாகாண சபைகள், பிராந்திய அடிப்படையிலான அபிவிருத்தி மற்றும் சமூக அடிப்படையிலான நிர்வாகத்தை உறுதிப்படுத்தும். இது நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும். மேலும், உலகளாவிய புலம்பெயர் தமிழர்களிடமிருந்து (டயாஸ்போராக்கள்) அதிக முதலீடுகளை ஈர்க்கும் வாய்ப்பையும் வழங்கும் - குறிப்பாக வேளாண்மை, பசுமை ஆற்றல், சுற்றுலா, கல்வி மற்றும் சிறு தொழில் துறைகளில்.

ஆனால், இந்த முதலீடுகள் நிலைத்தன்மையும், உள்ளூர் நிர்வாக அமைப்புகளின் மீதான நம்பிக்கையும் தேவைப்படும். தேர்தல்கள் நடத்தப்படுவது அரசாங்கம் ஜனநாயகப் பொறுப்புடன் மற்றும் புறக்கணிக்கப்பட்ட பிராந்தியங்களில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உறுதி கொண்டிருப்பதைத் துல்லியமாக காட்டும்.

### எதிர்காலத்திற்கான தருணம்

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் குழப்பங்களையும், சர்வதேச அழுத்தங்களையும் எதிர்கொண்டு வருகிறது. இச்சூழலில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது நல்லிணக்கம், நியாயம் மற்றும்

தொடர்ச்சி▼

# இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி 38 ஆண்டுகள்!

## 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடமுறைப்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவும் இதுவே தருணம்

தொடர்ச்சி▲

ஜனநாயகக் கடமைகளுக்கான அரசாங்கத்தின் நம்பிக்கையைக் காட்டும் வாய்ப்பாகும்.

தேர்தல்களை மேலும் தாமதிக்காமல் உடனடியாக நடத்துவது முக்கியம் – இது அரசமைப்புப் பொறுப்பாக மட்டுமல்ல, ஒழுங்கியல் அடிப்படையிலும் முக்கியமானது. இது வரலாற்று புண்களைக் குணப்படுத்தவும், உள்ளூர் நிர்வாகத்தை மீட்டெடுக்கவும், மேலும் ஒருங்கிணைந்த மற்றும் வளமான எதிர்காலத்திற்கான பாதையை அமைக்கவும் உதவும்.

39 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது இலங்கை வாக்குறுதிகளில் இருந்து செயலுக்குச் செல்ல வேண்டிய நேரம். இந்த ஒப்பந்தம் கடந்த காலத்தின் ஓர் ஆவணமாக அல்ல, நியாயம், சமத்துவம் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றுக்கான உயிருடனும் நடைமுறையிலும் உள்ள உறுதிமொழியாக இருக்க வேண்டும்.



# பளை திரியாய் அம்மன் கடல் தீர்த்தம்!

பளை திரியாய் அம்மன் கோவில் பெருந்திருவிழாவின் கடல் தீர்த்தத் திருவிழா நேற்று (29) நடைபெற்றது.







# புதிய அரசமைப்புக்கு இதுவே உரிய தருணம்

**கட்டுரையாளர்லயனல்போபகே, ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவர். நீண்ட காலம் அதன் பொதுச் செயலாளராகவும் இருந்தவர். ஜே.வி.பியின் தோல்வியுற்ற முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை அடுத்து ஆறு ஆண்டுகள் சிறையில் இருந்தவர். தேசிய இனப் பிரச்சினையில் ஜே.வி.பி. பேரினவாதப் போக்கை கைகொண்டமையை அடுத்து, அதைச் சகித்துக் கொள்ள முடியாமல், 1984இல் அந்த அமைப்பில் இருந்து வெளியேறியவர். இப்போது ஆஸ்திரேலியாவில் சிவில் சமூக செயற்பாட்டாளராகச் செயலாற்றி வருகிறார். அவரது கருத்து இந்த கட்டுரையில்.....**



- லயனல் போபகே -

நீண்ட காலமாக, அதிகாரம் ஒரு மையத்தில் குவிக்கப்பட்ட ஓர் அமைப்பில் நாம் வாழ்ந்தோம். இது ஜனநாயகத்தின், பொறுப்புணர்வின் மற்றும் வெளிப்படைத்தன்மையின் குரல்களை ஒடுக்கியுள்ளது. மேலும், இது அனைத்து இலங்கையர்களுக்கும் நீதி மற்றும் சமத்துவத்தை வழங்கத் தவறியுள்ளது.

இலங்கையின் அரசமைப்புப் பயணம் பல கட்டங்களை கடந்து வந்துள்ளது – 1931 இல் டொனமூர் அரசமைப்பிலிருந்து, 1948 இல் சோல்பரி அரசமைப்பிற்கு, அதன் பிறகு 1972 மற்றும் 1978 இல் இரண்டு குடியரசு அரசமைப்புகளுக்குப் பயணித்தது. 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு, செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை அறிமுகப்படுத்தியது. இது எங்களது வரலாற்றில் மிகவும் சேதமளிக்கும் அதிகாரப் பருவமாக அமைந்தது.

இந்த அமைப்பு, நிறுவனங்களைவிட நபர்களுக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றங்களை விட ஜனாதிபதிகளுக்கு மேலாதிக்கம் வழங்கியுள்ளது, பல்தொகுதித்தன்மையைக் கடந்து பெரும்பான்மைவாதத்திற்கு வலுவூட்டியுள்ளது.

1977 இற்குப் பிறகு நடந்த ஒவ்வொரு தேர்தலிலும் அரசியல்வாதிகள் செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை அகற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். ஆனால், ஆட்சிக்கு வத பிறகு, அந்த வாக்குறுதிகள் மறக்கப்படுகின்றன. காரணம் தெளிவாக உள்ளது – இந்த அமைப்பு மக்களுக்காக அல்ல, பதவியில் இருக்கும் நபர்களுக்காக பாதுகாக்கப்படுகிறது. இது கட்டுப்பாடில்லா செயல் அதிகாரத்தை வழங்குகிறது. நாடாளுமன்ற மேற்பார்வையைக் குறைக்கிறது. மற்றும் எல்லா அதிகாரத்தையும் கொழும்பில் மையப்படுத்துகிறது. இதனால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் உட்பட பல சமூகங்கள் புறக்கணிக்கப்படுவதை உணர்கின்றன.

நாம் ஒரு அடிப்படைமான, ஆனால் ஆழமான, கேள்வியை கேட்க வேண்டும். ஓர் அரசமைப்பின் நோக்கம் என்ன?

அது வெறும் சட்ட ஆவணம் அல்ல் அது ஒரு நல்லாட்சிக்கான வரைபடம் மற்றும் நம்முடைய ஒட்டுமொத்த மதிப்புகளின் பிரதிபலிப்பு. அது ஒவ்வொரு குடிமகனுக்கும் சமத்துவம், நீதி மற்றும் மரியாதையை உறுதி செய்யவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் அரசமைப்புகள் பெரும்பாலும் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் கருவிகளாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய அரசமைப்பு சில அடிப்படை உரிமைகளை உறுதி செய்கிறது. ஆனால் அதே வேளையில், சிங்களம் தமிழை விட மேலாகவும், புத்தமதம் மற்ற மதங்களை விட முன்னிலையாகவும் பார்க்கப்படுகிறது. பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை சமூகங்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யாத அமைப்பாக இது உள்ளது. இந்தப் பிழையான அமைப்பு பலத்த பிளவுகளுக்கும், தெற்கு மற்றும் வடக்கில் மூன்று மோதல் எழுச்சிகளுக்கும் வழவகுத்துள்ளது.

மற்ற நாடுகளிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

தென்னாப்பிரிக்காவில், ஆதிக்க இனவாதத்திற்கு பின், அரசமைப்புப் பணிகள் பரந்த பொதுக் கலந்துரையாடலின் அடிப்படையில் நடத்தப்பட்டன.

நேபாளத்தில், சவால்களைக் கடந்தும், நேரடி மக்கள் வாக்களிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்றம் இதில் பங்கு பற்றியது.

சிலியில்கூட, ஆரம்ப தோல்விகளுக்குப் பிறகு, மக்கள் மீண்டும் அரசமைப்பை தீர்மானிக்க முயற்சி செய்தனர்.

இந்த உதாரணங்கள் நீடித்த அமைதிக்கும் ஜனநாயகத்திற்கும் உரிய பாதை மக்கள் ஈடுபாடு மற்றும் கலந்துரையாடலின் வழியேதான் என்பதை நிரூபிக்கின்றன – அரசியல் தலைவர்களின் உளறல்களின் வழியே அல்ல.

இலங்கையின் அரசமைப்புத் திட்டங்கள் இதற்கு முற்றிலும் மாறானவை. பெண்கள், பழங்குடிகள் மற்றும் புறக்கணிக்கப்பட்ட சமூகங்கள் பெரும்பாலும் இதில் பங்கு பெறவில்லை. எந்தவிதமான தேசிய விவாதமும் இல்லை. ஒருமித்த உடன்பாடு உருவாக்கப்படவில்லை. அரசமைப்பு மக்கள் நலனுக்காக உருவாக்கப்படுவதாக உணரப்படவில்லை.

இது மாற வேண்டும்.

புதிய அரசமைப்பிற்கான முயற்சு பரந்த பொதுக் கலந்துரையாடலோடு தொடங்கவேண்டும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாய் மற்றும் வெட்டா சமூகங்கள் அனைத்தும் இதில் ஒலிக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் இளைஞர்களும் பங்களிக்க வேண்டும். நீண்ட காலமாகத் தீர்மானங்களில் புறக்கணிக்கப்பட்ட பெண்களும், முக்கிய பங்காளிகளாக இருக்க வேண்டும். மக்கள் இதில் உரிமை உணர்வோடு பங்கு பெற வேண்டும். இல்லையெனில், இது ஒரு சட்ட நூலகத்தில் தூசி படியும் ஆவணமாகவே போய்விடும்.

இந்த செயல்முறையின் மையமாக செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை நீக்கும் வேலை இருக்க வேண்டும். எந்த ஒரே நபருக்கும் ஜனநாயகத்தில் கட்டுப்பாடில்லாத அதிகாரம் இருக்கக்கூடாது. நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவதே நமது இலக்கு ஆக வேண்டும். உள்ளாட்சி ஆட்சியை வலுப்படுத்த வேண்டும். மற்றும் அரசு மக்களுக்காகவே சேவை செய்யும் வகையில் அமைவதை உறுதி செய்ய வேண்டும்.

தொடர்ச்சி▼

# புதிய அரசமைப்புக்கு இதுவே உரிய தருணம்

தொடர்ச்சி▲

மேலும், நாமும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் – அதையும் தாண்டியும் போகவேண்டும். அதிகாரப்பகிர்வு என்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கான அச்சுறுத்தல் அல்ல – அது அனைத்து சமூகங்களின் பங்கேற்பை உறுதிசெய்யும் வழியாகும்.

சிங்கள பகுதிகளில் பலர் அதிகாரப் பகிர்வைப் பிரிவினைவாத நோக்கமாகவே தவறாகக் கருதுகின்றனர். ஆனால், உண்மையில் அது கல்வி, சுகாதாரம், நிலம் மற்றும் நிர்வாகம் போன்ற துறைகளில் மக்கள் தாங்களே முடிவெடுக்க வழிவகுக்கும்.

மேலும், பலமான அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள், குடிமக்கள் உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளுடன் இணைந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

சிறுபான்மை உரிமைகள், பெண்கள் சமத்துவம், மொழி உரிமைகள் மற்றும் சூழல் பாதுகாப்புக்கான உறுதி கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும்.

சிலர், "முதலில் பொருளாதார வளர்ச்சி வேண்டும் அரசியல் சீர்திருத்தங்கள் பின்னாலேயே வரலாம்" என்கிறார்கள். ஆனால் இது தவறான வாதமாகும்.

ஒருங்கிணைக்கப்படாத, அநீதியான மற்றும் நிலைகுலைந்த சமூகத்தில் நிலையான பொருளாதார வளர்ச்சி நிகழமுடியாது. அரசியல் சீர்திருத்தம் என்பது வளர்ச்சிக்கான தடையாக அல்ல – அது வளர்ச்சிக்கான அடித்தளம்.

தேசிய மக்கள் சக்தி அரசு அரசலமைப்புச் சீர்திருத்தங்களை தனது ஆட்சி காலத்தின் பிற்பகுதியில் எடுத்துச் செய்யும் எனத் தெரிவித்துள்ளது. ஆனால், வரலாறு எங்களை எதைக் கற்பிக்கின்றது என்றால், தாமதமான தொடக்கம் தோல்விக்கு வழிவகுக்கும். இது முன்பும் நடந்திருக்கிறது – கண்ணியமான நேரங்கள் வீணாகிப் போனது, தேர்தல்கள் நெருங்கும்போது அரசியல் துணிவு மறைந்துவிட்டது. சீர்திருத்தங்கள் ஒதுக்கப்பட்டன. வாக்குறுதிகள் மறக்கப்பட்டன. அந்த மோசமான சுழற்சி மீண்டும் மீண்டும் நடந்தது.

இப்போது அதே நிலை மீண்டும் நிகழக்கூடாது.

இலங்கையின் எதிர்காலத்தைக் மாற்றும் ஒரு வாய்ப்பு நம்மிடம் உள்ளது – ஒரு புதிய, ஜனநாயக, உள்ளடக்கிய சமுதாயத்தை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பு. ஒவ்வொரு குடிமகனும் இதில் பங்கு பெற்றுள்ளதாக உணரவேண்டும். இது எளிதான செயல்முறை அல்ல. தற்போதைய அமைப்பிலிருந்து பலனடையும் சிலர் அதனை எதிர்த்து வருவர்.

ஆனால் மக்களின் விருப்பம், சிலரின் பயத்தைவிட வலிமையானது.

முடிவில், நான் ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன்: ஒரு அரசமைப்பு என்பது வெறும் எழுத்துக்கள் அல்ல – அது ஓர் உயிரோட்டமுள்ள ஆவணம். அது கொடூரத்திலிருந்து நம்மை பாதுகாக்க வேண்டும், நம்முடைய சுதந்திரங்களை காக்க வேண்டும். மற்றும் நியாயமான சமுதாயத்தை கட்டியெழுப்ப உதவவேண்டும்.

இலங்கையில் அமைதி, வளம் மற்றும் மதிப்புடன் வாழவேண்டும் என்றால், நம்முடைய பல்தொகுதி அடையாளத்தை பிரதிபலிக்கும் ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும். செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை முற்றிலும் நீக்கவேண்டும். அதிகாரத்தை பின்வட்டங்களில் பகிர்ந்தளிக்கவேண்டும், உரிமைகளை பாதுகாத்து, மக்களை – அரசியல்வாதிகளை அல்ல – மையமாக வைத்துத்தான் நாட்டு நிர்வாகம் அமைக்கவேண்டும்.

இது ஒரு புதிய துவக்கத்திற்கான நேரம். அதை வீணாக்காதீர்கள்.

# சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக இன அழிப்புக் குறித்து விசாரணை!

## கரைச்சி, பூநகரி, பளை பிரதேச சபைகளில் பிரேரணை முன்மொழிவு

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணை நீதியை பெற்றுத்தராது. எனவே சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வலியுறுத்தி கிளிநொச்சி கரைச்சி, பளை, பூநகரி பிரதேச சபைகளின் அடுத்த அமர்வில் பிரேரணை ஒன்றை ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சியான சமத்துவக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

அந்தப் பிரேரணையில குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனமான தமிழ் இனம் மீது இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் 2009 வரை மேற்கொண்டவை இனவழிப்பு நடவடிக்கையே எனவும், அதன் உச்சக்கட்டமாக 2009 இறுதி யுத்தகாலத்தில் மிக கொடூரமான இனவழிப்பு யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள், அத்தோடு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள், தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களான வடக்கு கிழக்கில் பல இடங்களில் பாரிய மனித புதைகுழிகள் காணப்படுகின்றன. அதன் ஒரு பெரும் சாட்சியாக செம்மணி மனித புதைக்குழி உள்ளது.

எனவேதான் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணைகள் நீதியை பெற்றுதராது. ஆகவே சர்வதேச சமூகம் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை என்பன ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்கி தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும். – என இப் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு ரயில் நிலைய விடுதிப் பகுதியில் பாரிய தீ!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் விடுதிப் பகுதியில் நேற்று செவ்வாய்க் கிழமை திடீரெனப் பற்றிய தீ அந்த பகுதியில் பரவியதையடுத்து அங்குள்ள பனைகள் உட்ட மரங்கள் தீயில் எரிந்தன. மட்டு நாகரசபை தீயணைப்பு படடையினர், இராணுவத்தினர் விரைந்து செயல்பட்டுத் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் அந்த பகுதியிலுள்ள புல் தரைகளில் தீப்பற்றி அங்கு பரவத் தொடங்கியது. தீ பனை மற்றும் மரங்களில் பற்றியதுடன் ரயில் எஞ்சின் திரும்பும் பகுதி மற்றும் ரயில்களுக்கான பெற்றோல் தாங்கிப் பதியையும் நோக்கியும் தீ பரவத் தொடங்கியது.

இதனையடுத்து மாநகரசபை முதல்வர் சிவன் பாக்கியநாதன் மற்றும் உறுப்பினர்கள் தீயணைப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் சுமார் 2 மணித்தியாலம் போராடி தீயைக் கட்டுப்பட்டிற்குள் கொண்டுவந்தனர்.















# அமித் ஷா பஹல்காம் தாக்குதலுக்காக ஏன் இராஜினாமா செய்யவில்லை?

## மக்களவையில் பிரியங்கா காந்தி கேள்வி



பஹல்காமில் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருப்பதை உளவுத்துறை ஏன் கண்டறியவில்லை?. இதற்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித் ஷா ஏன் இராஜினாமா செய்யவில்லை என மக்களவையில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் 'ஒபரேஷன் சிந்தூர்' குறித்து நடந்து வரும் விவாதத்தில் நேற்று பங்கேற்று பேசிய காங்கிரஸ் எம்.பி பிரியங்கா காந்தி,

"பாலைவனங்கள், அடர்ந்த காடுகள், பனி மலைகள் ஆகிய வற்றில் நம் நாட்டைப் பாதுகாக்கும் அனைத்து இராணுவ வீரர்களுக்கும், ஒவ்வொரு நொடியும் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் வீரர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். 1948 முதல் இப்போது வரை - பாகிஸ்தான் காஷ்மீரைத் தாக்கியபோது, நமது வீரர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளனர்.

நேற்று, பாதுகாப்பு அமைச்சர் ஒரு மணி நேரம் பேசினார். ஒபரேஷன் சிந்தூரின் அனைத்து விஷயங்கள் குறித்தும் பேசினார். ஆனால் மிக முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிக்க மறந்துவிட்டார். பஹல்காம் தாக்குதல் எப்படி நடந்தது, ஏன் நடந்தது, அங்கு 26 அப்பாவி இந்தியர்கள் பட்டப்பகலில் எப்படி கொல்லப்பட்டனர் என விவாதிக்க மறந்துவிட்டார்.

காஷ்மீரின் பஹல்காமில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் குவிந்தபோது, அங்கு பாதுகாப்புக்காக ஒரு இராணுவ வீரர் கூட இல்லாதது ஏன். பொதுமக்கள் மீது கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருப்பதை உளவுத்துறை ஏன் கண்டறியவில்லை. இதற்கு பொறுப்பேற்று புலனாய்வு அமைப்பின் தலைவர் ஏன் இராஜினாமா செய்யவில்லை, உள்துறை அமைச்சர் ஏன் இராஜினாமா செய்யவில்லை. நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் தானே பொறுப்பு. எனவே அவர்கள் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். ஜம்மு காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பிவிட்டதாக அரசாங்கம் கூறுகிறது. அப்படியானால் பஹல்காம் தாக்குதல் எப்படி நடந்தது.

பாகிஸ்தானுக்கு சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்றால், இந்தப் போர் ஏன் நின்றது?. அமெரிக்க ஜனாதிபதி ஏன் போர் நிறுத்தத்தை அறிவித்தார்?. பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வலியைப் பற்றி நான் பேசுகிறேன், ஏனென்றால் அந்த வலி எனக்குத் தெரியும். பயங்கரவாதிகள் என் தந்தையைக் கொன்றபோது என் அம்மா அழுதார். இந்த அரசாங்கம் பெருமையை மட்டுமே எடுத்துக்கொள்ள விரும்புகிறது, பொறுப்பை அல்ல. இது தங்க கிரீடம் அல்ல, இது முள் கிரீடம்." என்று தெரிவித்தார்.

# பாகிஸ்தானுக்கு காங்கிரஸ் நற்சான்றிதழ் வழங்குகிறது

## அமித் ஷா குற்றச்சாட்டு

"பஹல்காம் பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்கள் என்று ஏன் கருத வேண்டும்? அவர்கள் உள்நாட்டு பயங்கரவாதிகளாக இருப்பார்கள் என்று முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறி இருக்கிறார். இதன் மூலம் காங்கிரஸ் பாகிஸ்தானுக்கு நற்சான்றிதழ் வழங்கி உள்ளது."

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பான எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் விதமாக நாடாளுமன்ற மக்களவையில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா,

"பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து வந்தார்கள் என்பதற்கான ஆதாரம் என்ன என்று ப. சிதம்பரம் கேள்வி எழுப்பி இருக்கிறார். பாகிஸ்தானை காப்பாற்றுவதன் மூலம் அவருக்கு என்ன கிடைக்கும் என்று நான் அவரிடம் கேட்க விரும்புகிறேன். அவர் இப்படிச் சொல்வதன் அர்த்தம், பாகிஸ்தான் குற்றமற்ற நாடு என்பதாகும். அவர் யாரைக் காப்பாற்ற விரும்புகிறார்? பாகிஸ்தானைப் பாதுகாப்பதால் அவருக்கு என்ன லாபம்?

பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் 3 பேரும் ஒபரேஷன் மகாதேவ் நடவடிக்கையில் கொல்லப்பட்டார்கள். அவர்கள் 3 பேரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது. அவர்களில் இருவரது வாக்காளர் அடையாள அட்டை எண்கள் எங்களிடம் உள்ளன. அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட சொக்லேட்டுகள் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவை.

அவர்கள் பாகிஸ்தானியர்கள் இல்லை எனில், பாகிஸ்தான் ஏன் தாக்கப்பட்டது என்ற கேள்வியையும் ப. சிதம்பரம் எழுப்பியுள்ளார். பாகிஸ்தானைக் காப்பாற்ற அவர்கள் (காங்கிரஸ்) செய்யும் சதித்திட்டத்தை 130 கோடி இந்தியர்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஏப்ரல் 24 ஆம் திகதி பஹல்காமுக்குச் செல்லாமல் பிரதமர் மோடி ஏன் பிஹாருக்குச் சென்றார் என மக்களவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கோகாய் கேள்வி எழுப்பியுள்ளார். பஹல்காம் தாக்குதல் நடந்தபோது பிரதமர் வெளிநாட்டில் இருந்தார். பிரதமர் மோடி பிஹார் சென்ற போது, பஹல்காமில் ராகுல் காந்தி மட்டுமே இருந்தார். வேறு யாரும் அங்கு இருக்கவில்லை. நாட்டின் குடிமக்கள் மீது



இதுபோன்ற தாக்குதல் நடந்தால் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டியது பிரதமரின் கடமை.

ஏப்ரல் 30 ஆம் திகதி பாதுகாப்புக்கான அமைச்சரவை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில், பாதுகாப்புப் படைகளுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டது. இதையடுத்து, மே 7 ஆம் திகதி ஒபரேஷன் சிந்தூர் தொடங்கப்பட்டு அதிகாலை 1.04 மணி முதல் 1.24 மணிக்குள் தாக்குதல் நடத்தி முடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் பாகிஸ்னின் 9 பயங்கரவாத முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. இந்த தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அதேநேரத்தில், பாகிஸ்தானிய பொதுமக்கள் யாரும் கொல்லப்படவில்லை.

இந்த தாக்குதலை அடுத்து நமது டி.ஜி.எம்.ஓ, இந்தியா தனது தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தி பயங்கரவாத உள்கட்டமைப்பை தாக்கியதாக பாகிஸ்தான் டி.ஜி.எம்.ஓவிடம் தெரிவித்தார். இது மன்மோகன் சிங் ஆட்சி அல்ல, அமைதியாக இருப்பதற்கு. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவை ரத்தம் சிந்தவைத்த பயங்கரவாதிகளை நாங்கள் கொன்றோம்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் உருவானதற்கு ஜவஹர்லால் நேரு மட்டுமே காரணம். 1960 இல் சிந்து நதி நீரில் 80 வீதம் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்டது. 1971இல் சிம்லா ஒப்பந்தத்தின்போது ஆக்கிரமிப்பு காஷ்மீர் பற்றி காங்கிரஸ் மறந்துவிட்டது. அப்போது அவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை கைப்பற்றி இருந்தால், இப்போது அங்குள்ள முகாம்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டிய அவசியம் இருந்திருக்காது." என்று தெரிவித்தார்.



# போர் நிறுத்த ஒப்பந்தத்தை கம்போடியா மீறுகின்றது

## தாய்லாந்து இராணுவம் குற்றச்சாட்டு

கம்போடியா போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக தாய்லாந்து இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. முன்னதாக, இரு நாடுகளும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு நேற்று முன்தினம் ஒப்புக் கொண்டன.

எல்லை தொடர்பான சிக்கல்களால், கடந்த வியாழக்கிழமை (ஜூலை 24) எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 5 தாய்லாந்து வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல் வெடித்தது. இந்த போரில் நேற்று முன்தினம் வரை இருதரப்பிலும் சேர்த்து 38 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் 3,00,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்த்தனர்.

இந்த நிலையில், தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய் மற்றும் கம்போடியாவின் பிரதமர் ஹுன் மானெட் ஆகியோர் நேற்று முன்தினம் மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன்வரின் அதிகாரபூர்வ இல்லத்தில் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து, தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் நிபந்தனையற்ற உடனடி போர்நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்தார். நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வரும் என்று இரு நாடுகளும் அறிவித்தன.

இந்த நிலையில், கம்போடியா போர் நிறுத்தத்தை மீறிவிட்டதாக தாய்லாந்து இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. இதுகுறித்து பேசிய தாய்லாந்து இராணுவ செய்தித் தொடர்பாளர் விந்தாய் சுவாரி,

“போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நேரத்தில், கம்போடிய படைகள் தாய்லாந்து எல்லைக்குள் பல பகுதிகளில் ஆயுதமேந்திய தாக்குதல்களை நடத்தியதை தாய்லாந்து தரப்பு கண்டறிந்தது. இது ஒப்பந்தத்தை வேண்டுமென்றே மீறுவதாகவும், பரஸ்பர நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் தெளிவான முயற்சியாகவும் அமைகிறது. எனவே, கம்போடியாவின் மீறல்களுக்கு தாய்லாந்து சரியான முறையில் பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்

ஆனாலும், இதற்கு நேர்மாறாக “நள்ளிரவு 12 மணிக்கு போர் நிறுத்தம் ஏற்பட்டதிலிருந்து எங்கள் படைகள் தாக்குதல்களை நிறுத்தின.” என்று கம்போடிய பிரதமர் ஹுன் மானெட் தெரிவித்துள்ளார்.










# நியூயோர்க்கில் துப்பாக்கிச்சூடு; 5 பேர் உயிரிழப்பு, பலர் காயம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட சுமார் 5 பேர் உயிரிழந்தனர். பலர் இதில் காயமடைந்துள்ளனர்.

நியூயோர்க்கின் மன்ஹாட்டன் பகுதியில் உள்ள 44 மாடிகள் கொண்ட அலுவலக கட்டடத்தில் இந்த தாக்குதல் நடந்துள்ளது. பல்வேறு முக்கிய நிறுவனங்கள் இயங்கும் அந்த கட்டடத்தில் மக்கள் கூட்டம் அதிகம் இருந்த மாலை நேரமான சுமார் 6.30 மணி அளவில் தாக்குதல் நடந்துள்ளது.

பொலிஸிடம் கிடைத்த சி.சி.டி.வி. காட்சிகளின் அடிப்படையில் கண்ணாடி அணிந்த படி நீல நிற ஆடை அணிந்திருந்த நபர் ஒருவர், கையில் துப்பாக்கி உடன் அலுவலக கட்டடத்தில் நுழைந்து, தாக்குதல் நடத்தியுள்ளார் என தெரிய வந்துள்ளது. இதை நியூயோர்க் பொலிஸும், அமெரிக்க செய்தி நிறுவனங்களும் உறுதி செய்துள்ளன.

அயர்லாந்தின் தூதரகம், நேஷனல் ஃபுட்பால் லீக் அலுவலகமும் இந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. தாக்குதல் தொடர்பான காணொலி காட்சிகள் சமூக வலைதளத்தில் பகிரப்பட்டுள்ளன. அதில் தாக்குதலில் இருந்து மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ள அங்கிருந்த நாற்காலிகள் மாதிரியான பொருள்களை பயன்படுத்தி கொண்டுள்ளனர். சினிமா படங்களில் வரும் காட்சியை போல கட்டடத்தில் இருந்த மக்கள் கைகளை தலைக்கு மேல் உயர்த்தியபடி ஒவ்வொருவராக அந்த கட்டடத்தில் இருந்து வெளிவந்தனர். இதுவும் சமூக வலைதளத்தில் காணொலி பதிவாக வெளியாகி உள்ளது.


இந்த தாக்குதலை லாஸ் வேகாஸ் பகுதியை சேர்ந்த ஷேன் தமுரா என்பவர் நடத்தியுள்ளார். தாக்குதலுக்கு பிறகு தன்னைத்தானே அவர் துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்துள்ளார். அவரது உடலில் இருந்த துப்பாக்கிச் சூட்டின் காயம் அதை உறுதி செய்வதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில் ஷேன் தமுரா ஹவாயில் பிறந்தவர் என தெரிய வந்துள்ளது. லாஸ் வேகாஸுக்கு குடிபெயர்ந்த அவருக்கு குற்றப் பின்னணி எதுவும் இல்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர். தாக்குதல் நடத்தியதற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருவதாக கூறியுள்ளனர்.

தனியார் நிறுவன துப்பறிவாளராக பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ளார் தமுரா. அவரது துப்பறிவாளர் உரிமம் காலாவதியாகி உள்ளது. அவர் உதை பந்து விளையாட்டில் ஆர்வம் கொண்டவர் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த தாக்குதலால் அந்த கட்டடத்தில் இருந்த மக்கள் பயத்தில் உறைந்தனர். முதலில் கூட்டத்தில் ஏதோ பீதி ஏற்பட்டது போல இருந்ததாகவும். அதன் பின்னர்தான் துப்பாக்கிச் சூடு என தெரியவந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர். தாக்குதலை அடுத்து நியூயோர்க் நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.









# இன்றைய ராசி பலன்கள் -30.07.2025




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இருப்பினும் மேற்கொண்டு செல்வதற்கு சில உந்துதல்கள் தேவைப்படுகின்றது. இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும்.

பணியிடத்தில் பொறுமை தேவை. பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கடினமாக உழைக்க வேண்டும்.

நல்லுறவை ஏற்படுத்த துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறை மகிழ்ச்சியயை ஏற்படுத்தும்.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன்கள் வாங்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நம்பிக்கை மனப்பான்மை ஆரோக்கியத்தை தக்க வைக்கும்.




இன்று நிலுவையில் உள்ள பணிகளை செய்வதற்கு உந்துதல் கிடைக்கும். உங்கள் முயற்சி மூலம் இன்றைய நாளை வளமாக்கலாம்.

நீங்கள் செய்யும் பணி உங்களுக்கு திருப்தி அளிக்கும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையை நீங்கள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவரை நன்கு புரிந்துகொள்வீர்கள்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் திருப்தி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்றைய நாள் மிதமான பலன்களைத் தரும். யதார்த்தமான அணுகுமுறை மூலம் நீங்கள் நல்ல பலன்களைக் காணலாம். எதிர்மறை எண்ணங்களை கைவிடுங்கள்.

பணியிடத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். இதனை சமாளிக்க நீங்கள் திட்டமிட வேண்டும். சிறப்பான முறையில் தகவல்களைப் பரிமாற்ற வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பேண எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களுக்கும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.




1 2 3 4 5ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். இதனால் நற்பலன்கள் கிடைக்கும். எளிதில் உணர்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்து விடுங்கள். இன்று முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

பணியில் கவனம் செலுத்துங்கள். கவனச் சிதறலால் தவறுகள் ஏற்படும்.

உறவின் நல்லிணக்கத்தை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் மகிழ்ச்சி கெட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் ஆடம்பர செலவுகளை விட்டுக்கொடுக்க வேண்டும்.

ஜீரணக் கோளாறு, தோள் வலி போன்ற உபாதைகள் ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியமாக உணரலாம்.




இன்று வெற்றி பெறுவதற்கு யதார்த்தமான அணுகுமுறை தேவை. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலாது. பணிகளைக் கையாளும்போது தவறுகள் நேராத வண்ணம் கவனம் தேவை.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையால் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை தக்க வைத்துக்கொள்ளும் வகை அறிய வேண்டும்.

தொண்டை பாதிப்புகளுக்கு ஆளாக நேரலாம். கண்களில் எரிச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் கண் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று உற்சாகமான நாள். இன்றைய நாளை திருப்தியுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணிச்சூழல் ஆக்கப்பூர்வமான பலன்களைத் தரும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

உங்களின் சகஜமான அணுகுமுறை மூலம் உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. பணத்தை சேமிக்கும் நல்ல சூழ்நிலை காணப்படுகின்றது.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொடர்ச்சியான தியானப் பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். புதிய நண்பர்கள் மற்றும் புதிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் பணிக்கு நல்ல கருத்துக் கணிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு வலுப்படும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பக்திப் பாடல்கள், ஸ்லோகங்கள் கேட்பதன் மூலம் இன்னும் ஆரோக்கியமாக இருக்கலாம்.




உங்கள் செயல்களை ஆற்றும் பொழுது கவனமாக இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்கக் கூடாது.

பணியிடத்தில் நல்ல பலன்களைப் பெற அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சிறந்த பணி நடைமுறைகளை உருவாக்கி உங்கள் திறமைகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

உங்கள் துணையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும். உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக காணப்படாது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று நீங்கள் எளிதில் சோர்வடைவீர்கள். தோல் ஒவ்வாமையிலிருந்து தப்பிக்க எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -30.07.2025




இன்று சுமாரான நாள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உறுதியுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் பதற்றமான நிலை காணப்படும். பணிச் சுமையை சமாளிக்க சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராம ரிக்க விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள் ளுங்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமானதாக இல்லை. உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

பதற்றப்படாமல் இருங்கள். தியானம் மேற் கொள்வது நல்லது.




இன்றைய நாள் சாதகமான நாள். இன்று கூடுதல் பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு திட்டமிடலாம்.

பணியிடத்தில் முன்னேற றம் காணப்படும். உங்கள் மேல திகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மற்றும் கட்டுப்பாடு மூலம் உங்கள் துணையுடன் நல் லுறவு பராமரிபீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப் படும். பணத்தை பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். யோகா பயிற்சி சிறந்த பலனைத் தரும்.




உங்கள் முயற்சியில் வெற்றி பெற உகந்த நாள். உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வெற்றி கிடைக் கும். உங்கள் திறமைக்கு மேல திகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவு காணப்படும். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர் கள்.




இன்றைய நாள் சுமாராக இருக்கும். கவனக் குறைவாக இருந்தால் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேர லாம். எனவே நகைச்சுவையுடன் கூடிய அணுகுமுறை திருப்தியை அளிக்கும்.

உங்கள் கீழ் பணி புரிபவர்க ளால் சில தொல்லைகளை சந்திக்க நேரும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். பணிகளை கவ னமுடன் கையாள வேண்டும்.

நட்பான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் இருவரும் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ளலாம். நல்லுறவிற்கு இது மிகவும் அவசியம்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் கண்களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். தியானப் பயிற்சி மூலம் அமைதி பெறலாம்.

# துரையப்பா விளையாட்டரங்கைப் பார்வையிட்டது யாழ். மாநகர சபையின் கல்வி, விளையாட்டுக்குழு!

## தேவைப்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்





யாழ். மாநகர சபையின் கல்வி மற்றும் விளையாட்டுக்குழு நேற்று (29) துரையப்பா விளையாட்டரங்குக்கு கள விஜயம் செய்துள்ளனர்.

குழுத் தலைவரான உறுப்பினர் விக்ரர்குமார் சுரேன் மற்றும் உறுப்பி னர்களளான கிறிஸ்ணகுமார், விஜய சிங்கம் தயாபரன் ஆகியோர் இந்தக் கள விஜயத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாநகர சபை கல்வி மற்றும் விளையாட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டு ஒரு வாரமே ஆகியுள்ள நிலையில் துரை யப்பா மைதான தற்போதைய நிலை தொடர்பாக அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

யாழ். மாநகர சபை கல்வி மற்றும் விளையாட்டுக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வை யிட்டு அங்கு மேற்கொள்ள வேண் டிய கழிவு அகற்றல் மற்றும் மைதான புற்களுக்கு நீர் பாச்சுதல், மலசல கூட சுத்தம், தேவையான விளையாட்டு உபகர ணங்கள், தேவைப்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

இதேவேளை எதிர்வரும் 16,17,18, 19,20 ஆகிய தினங்களில் மாகாண மட்ட விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்த நிலையில் மைதான முன்னா யத்தம் தொடர்பான வேலைகளை மேற் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட மாநகர உத்தியோகத்தர்களுக்கு கல்வி மற்றும் விளையாட்டுக்குழு தலைவர் அறிவுறுத்தி யுள்ளார்.